1972 ஆகஸ்ட் 23]

கொண்டு விட்டு, மீதியுள்ளதை 15 ஆண்டுகளில் தவணை முறையில் தரலாம் என்று நிலை இருக்கிறது. பண்படுத்தப்பட்ட நிலம் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. இடம் ஒதுக்குகிற நேரத்தில் தியாகிகளுக்கு முதலிடம் தரலாம் என்ற கருத்து வீட்டு வசதி வாரியத்திற்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

Financial assistance for marriages

* 294. Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the authorities of Sri Subramaniaswami temple, Tiruchendur, have undertaken to finance marriages; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) இந்து ஏழைகளுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்க சுப்பிரமணியசாமி திருக்கோயில் அறங்காவலர் குழுவில் ரூ 100-க்கு மேல் ரூ. 150-க்குள் இலவசமாக வருடத்திற்கு 100 திருமணங்கள் வரை வைகாசி மாதம் முதற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வகையில் மணமக்களுக்கு கல்யாண உடை, திருமாங்கல்யம், கோவில் கட்டணம், புரோகிதம் முதலியவை இலவசமாக மேற்படி தொகைக்குள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பலயிடங்களில் ஆண்டவனுக்கு ஆண்டுதோறும் திருமணம் நடைபெறுகிறது. அதற்குப் பதிலாக இப்படிப்பட்ட ஏழைகள், தாலி வாங்கக் கூட வசதியில்லாதவர்கள், அல்லது அப்படிப்பட்டவர்களுக்கு கோவிலில் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஏழைகளுக்கு திருமணம் செய்து வைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எந்தக் கோவிலில் உபரி நிதி இருக்கிறதோ, எந்தக் கோவிலில் உள்ள அறங்காவலர்கள் இப்படிப்பட்ட திருமணங்களைச் செய்வதற்கு ஒப்புக்கொள்கிறார்களோ, அந்தக் கோவில்களில் இந்த முறை செயல்பட இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, அரசாங்கம் ஒரு பக்கத்திலே குழந்தைகள் பிறப்பதை தடை செய்யவேண்டுமென்பதற்காக நிறைய பணத்தைச் செலவு செய்து பிரசாரம் செய்து வருகின்றது. கல்யாணம் கொஞ்சம் லேட்டாகச் செய்தால் குழந்தைகள் பிறப்பதையும் கொஞ்சம் தடை செய்ய முடியும். அரசாங்கமே கல்யாணம் செய்வதற்கு உதவி செய்கிறேன் என்று சொல்லி ரூ. 2,000 பணத்தை இப்போது ஒதுக்கியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் கல்யாணம் ஆனவர்கள் கூட பணம் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். இப்போது கல்யாணம் செய்வதற்கு கோவில் பணத்தையும் எடுத்துச் செலவிடலாமா? ஒரு பக்கத்தில் மக்கள் தொகையைக் குறைப்பதற்குப் பிரசாரம், மற்றொரு வகையில் அரசாங்கமே விரைவாகக் கல்யாணம் நடத்தி வைப்பதற்கு வசதி செய்து கொடுப்பது, இது விஷயத்தில் அரசாங்கம் என்ன கொள்கை அனுஷ்டித்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூழுக்கும் ஆசை. மீசைக்கும் ஆசை என்றால். கூழ் குடிக்கும்போது மீசையை ஒதுக்கிக்கொண்டுதான் கூழ் குடிக்க வேண்டும். (சிரிப்பு)

ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில்

* **295. வினா—திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஸ்ரீவில்லிபுத்தூர் பெருமாள் கோயில் கோபுரத் திருப்பணி செய்ய அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]